# செம்மண்

நிலம் 3 துகள் 153 வள்ளுவர் ஆண்டு 2052, 24 - 30 ஆனி 2023 வாரமலர் பக்கங்கள் 18





# காவு கொள்ளும் கொடூரக் கடல்

## – டைட்டானிக்கை அடுத்து டைட்டன்...! –

தனது முதல் பயணத்திலேயே கடலில் மூழ்கிப் பலரையும் சோகத்தில் ஆழ்த்தியது டைட்டானிக் கப்பல். டைட்டானிக் திரைப்படத்தில் அந்தக் காட்சியைத் தத்ரூபமாகக் காட்டிப் பார்வையாளர்களைக் கவர்ந்தவர் ஆங்கில இயக்நர் ஜேம்ஸ் கமரூன். பிரமாண்டமமான ஆடம்பரக் கப்பலான டைட்டானிக் கடலுக்குள் மூழ்கித் தனது முதல் பயணத்திலேயே பல உயிர்களைக் கடலில் தத்தளிக்கச் செய்த காட்சியைப் படத்தில் மிக யதார்த்தமாகக் காட்சிப்படுத்தியிருந்தார் கமரூன். **1912** ஏப்ரல் **14**ஆம் திகதியன்று தனது பயணத்தை ஆரம்பித்த டைட்டானிக் அன்றிரவு இரவு **11:40** மணிக்கு வட அத்திலாந்திக் பெருங்கடலில் பனிப்பாறையுடன் மோதி **2** மணித்தியாலங்கள் **40** நிமிடங்களில் ஏப்ரல் **15**இல் மறுநாள் கடலுக்குள் முற்றாக மூழ்கிப்போனது. அதில் பயணம் செய்த **1503** பேர் சாவடைந்தனர். மூழ்கிய டை;டானிக் இப்போது கடல் மட்டத்திலிருந்து **12**ஆயிரம் அடி ஆழத்தில் இருக்கின்றது. இவ்வாழத்தின் நீரின் அழுத்தம் ஒரு சதுர அங்குலத்திற்கு **6**ஆயிரம்



இறாத்தல் ஆக உள்ளது என்று கணிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில்தான் அந்தக் கடல் பகுதியில் மற்றொரு அசம்பாவிதம் நிகழ்ந்திருக்கிறது.

**டைட்டானிக் நோக்கிய பயணம்**

டைட்டானிக் கப்பலைப் பலர் பார்க்க விரும்புவதால் டை;டானிக் நோக்கிய சுற்றுலாப் பயணத்தை ஓஷன்கேட் என்கிற நிறுவனம் ஆரம்பித்தது. அதன் தலைமை நிர்வாகி ஸ்டாக்டன் ரஷ். அவரும் இந்த நீர்மூழ்கியில் பயணம் செய்தார். அனுபவம் வாய்ந்த பொறியாளரான அவர், சோதனை வானூர்தியை வடிவமைத்தவர். பல சிறு நீர்மூழ்கிகளில் பணியாற்றியுள்ளார். ஸ்டாக்டன் ரஷ் 2021இல் டைட்டானிக்கின் சிதைந்த பாகங்கள் இருக்கும் இடத்துக்குச் செல்லும் பயணங்களை ஏற்பாடு செய்தார். இதற்காக ஒருவரிடமிருந்து 2லட்சத்து 50ஆயிரம் டொலர்களை அந்த நிறுவனம் பெற்றது. அவ்வாறு செலவு செய்பவர்கள் டைட்டானிக் கப்பலை நெருக்க மாகச் சென்று பார்க்கும் வாய்ப்பைப் பெற்றனர். இதற்காக 595 கிலோ மீற்றர் தூரம் வரை கப்பலில் டைட்டானிக் சிதைவுகள் உள்ள கடலின் மேற்பகுதி நோக்கிச் சென்று அங்கிருந்து டைட்டன் எனப்படும் பேருந்து




அளவிலான நீர்மூழ்கியில் 8 மணிநேரம் பயணத்தால் டைட்டானிக் சிதைவுகளைக் காணலாம். அவ்வாறு மூழ்கிய டைட்டானிக் கப்பலின் பாகங்களைப் பார்வையிடுவதற்காக அந்த நீர்மூழ்கிக் கப்பலில் சென்ற 5பேர் தான் தற்போது இறந்திருக்கிறார்கள். இந்த இறப்புக்குக் காரணம் கடும் அமுக்கம் காரணமாக அந்த நீர்மூழ்கிக் கப்பல் வெடித்துச் சிதறியமை தான் என்று கூறப்படுகிறது. ஆனால், இது இறுதி முடிவல்ல.

**டைட்டானிக் - டைட்டன் விபத்துகளின் ஒற்றுமை**

டைட்டானிக் கப்பலை போலவே முன் எச்சரிக்கையைப் புறந்தள்ளியதால் தான் டைட்டன் நீர்மூழ்கிக் கப்பலும் விபத்துக்குள்ளானது என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்த விமர்சனத்தை முன்வைத்திருப்புத வேறு யாருமல்ல....! டைட்டானிக் பட இயக்குநர் ஜேம்ஸ் கமரூன் தான். டைட்டன் நீர்மூழ்கியின் விபத்தை டைட்டானிக் விபத்துடன் ஒப்பிட்டுப் பேசியுள்ள அவர், டைட்டானிக் கப்பல் எச்சரிக்கைகளைப் புறக்கணித்து முன்னேறியதுபோலத்தான் டைட்டன் நீர்மூழ்கியும் எச்சரிக்கையை புறக்கணித்துச் சென்றுள்ளது. அதுவே இந்த விபத்திற்குக் காரணம் என்றுள்ள அவர், 'இது புறக்கணிக்கப்பட்ட எச்சரிக்கைகளால் நிகழ்ந்த சோகம். டைட்டானிக் கப்பல் கடலின் அடிப்பகுதியில் கிடக்கிறது. அதற்குக் காரணம் அதிலுள்ள பொருட்களின் தன்மை இல்லை. அது பயணித்த மோசமான அந்தக் கடல்வழியின் காரணமாகவே அது அங்கு கிடக்கிறது. கேப்டனுக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. பாதையில் பனிப்பாறைகள் இருந்தன. அது ஓர் அமாவாசை இரவு. அவர் எந்தக் காரணத்திற்காகவோ முன்னேறிச் சென்றார். இப்போது அதே இடத்தில், 'அதே மோசமான காரணத்திற்காக, டைட்டானிக்கின் சிதைவுக்கு அருகிலேயே இன்னுமொரு சிதைவு உள்ளது,' என்றுள்ளார். கடலில் மூழ்கிக் கிடக்கின்ற டைட்டானிக் கப்பலைத் தான் இயக்கும் படத்துக்காகப் பார்க்கும் நோக்கில் கமரூன் 33 முறை சென்று அதைப் பார்த்துத் திரும்பியவர் என்கிற விதத்தில் அவரது கருத்துகளும் கவனம் பெறுகின்றன.

**விபத்து எவ்வாறு நிகழ்ந்தது...?**

இதுவரையான தகவல்களின்படி, முதலில் நீர்மூழ்கியின் மின்னணு அமைப்பு செயலிழந்து அதன் தகவல் தொடர்பு அமைப்பு துண்டிக்கப்பட்டது, அதன் டிராக்கிங் டிரான்ஸ்பாண்டர் செயலிழந்தது. நீர்மூழ்கி வழிதவறிப்போயிற்று. அப்போது அது 3ஆயிரத்து 500 மீற்றர் ஆழத்தில் இருந்தது. தொடர்பு சாதனங்களும், பயண வழியும் இல்லாமல் போயிற்று.

அமெரிக்கக் கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் ஜோன் மௌகரின் கூற்றுப்படி, நீர்மூழ்கியின் உள்ளே இருந்து வெடிப்பு நடந்திருக்கிறது என்று அறிய முடிகிறது. அந்த நீர்மூழ்கியின் இரண்டு பாகங்கள் கடலுக்கு அடியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. டைட்டனின் வால் கூம்பு மற்றும் அதன் தரையிறங்கும் சட்டகம் ஆகியவையே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதை வைத்துப் பார்க்கும் போது கப்பல் சிதறியதாகவே தெரிகிறது. இது ஏன் நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பதற்கு இதுவரை கிடைத்திருக்கும் பாகங்களைக் கொண்டு ஆய்வு செய்யப்படும் என்று மீட்புக் குழு நிபுணர்கள் கூறுகிறார்கள். நீர்மூழ்கிக்குள் கறுப்புப் பெட்டி எதுவும் இல்லை, எனவே கப்பலின் கடைசி நகர்வுகளை உங்களால் கண்காணிக்க முடியாது என்றும் கூறுகிறார்கள். இப்போது கிடைத்திருக்கும் நீர்மூழ்கியின் சிதைந்த துண்டுகளை மேற்பரப்பிற்கு கொண்டு வந்ததும், அந்த கடைசி தருணங்களில் என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ளும் வகையில் அதை ஆய்வு செய்வார்கள். நீர்மூழ்கியின் பாகங்கள் நுண்ணோக்கின் கீழ் கவனமாக ஆராயப்படும். எந்த இடத்தில் இந்த வெடிப்பு ஏற்பட்டது, பிளவு எங்கே தொடங்கியது என்பது அதன் மூலம் கண்டுபிடிக்கப்படும். ஆனால், கடலுக்கு அடியில் பல்லாயிரம் மீற்றர் ஆழத்துக்குச் சென்று இறந்தவர்களின் உடல்களை மீட்பது சாத்தியமா என்ற கேள்வியும் தற்போது எழுந்துள்ளது.



# தொன்மையைப் பாதுகாத்தல்

**ஜெயந்தன்**

> **யுனெஸ்கோவால் மிகப் பழைய தொல்லியல் சின்னம் என வரையறுக்கப்பட்ட பலவற்றுக்கு வர்ணம் பூசிப் புதிதாக்கிய சம்பவங்களும் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளன**

"இலங்கையின் தொல்லியல் சின்னங்களை யுனெஸ்கோ அமைப்பின் மேற்பார்வையில் பாதுகாக்க வேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அண்மையில் நாடாளுமன்றில் உரையாற்றியிருந்தார். அதே நாடாளுமன்ற அமர்வில், குருந்தூர் மலையில் தமிழ்ப் பௌத்த அடையாளங்கள் இருந்தன. வரலாற்றை நன்கு தேடி அறிவதன்மூலம் பிக்குகள் அவற்றைத் தெரிந்து கொள்ள முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குறிப்பிட்டார். இந்த உரையில் குருந்தூர் மலையில் ஏதோவொரு வகையில் பௌத்தம் இருந்தது என்பதை ஏற்றுக்கொள்கிறார் சிறிதரன். இதை எவ்வாறு உறுதிப்படுத்துவது...? செல்வராசா கஜேந்திரனின் கூற்றில் நியாயம் இருந்தாலும் யுனெஸ்கோ அமைப்போ, பன்னாட்டுத் தொல்லியலாளர்களோ யாழ்ப்பாணத்தில் வந்து ஆய்வு செய்தால்கூட கந்தரோடை பௌத்த விகாரையே மிகப் பழைய தொல்லியல் ஆதாரமாக அவர்களால் அடையாளம் காணப்படும். காரணம், பல்வேறு புராதன ஆதாரங்களுடன் இருந்த சைவ, இந்துக் கோவில்கள் எல்லாம் தமிழ் மேதவிகளாலேயே இடித்துத் தள்ளப்பட்டுப் புதிதாகப் பெரிய கோவில்கள் கட்டப்பட்டுவிட்டன. இப்போதுள்ள இந்துக் கோவில்களின் தொல்லியல் ஆதரங்கள் 25வருடங்களுக்கு உட்பட்டவையாகவும், புதிய கோவில்களாகவுமே அடையாளப்படுத்தப்படும்.

**யாழ்ப்பாணக் கோட்டை**

யாழ்ப்பாணக் கோட்டையின் சுற்றுப்புறச் சுவர்க் கற்களை எடுத்து ஆராய்ந்தால் அந்தக் கற்கள் எந்தப் பிரதேசத்திற்குரியவை என்றும் அவற்றைச் செதுக்கி மட்டப்படுத்திய கைவினைத் தன்மை, கற்களில் காணப்படும் குறியீடுகள், எழுத்துகளை வைத்து அந்தக் கற்கள் எந்தக் காலத்தவை என்றும் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன என்கிற விடயங்களையும் தொல்லியல் ஆய்வுகள் மூலம் கண்டறிய முடியும். அவ்வாறான நுனுக்கமான ஆய்வுகளைத் தமிழ் வரலாற்றாசிரியர்களோ தொல்லியலாளர்களோ இதுவரை மேற்கொள்ளவில்லை.

**வரலாற்று அடையாளங்களைப் பேணுவதில்லை**

தமிழர் பண்பாட்டில் வரலாற்று ஆதாரங்களைப் பேணுகின்ற மரபு இல்லை. ஒவ்வொரு வீடுகளை எடுத்துக்கொண்டால்கூடத் தமது பாட்டன், பூட்டன், பாட்டி, பூட்டி பாவித்த பொருள்களை நினைவுச் சின்னங்களாகப் பேணும் மரபு சமூகத்தில் இல்லை. அவற்றை எங்கோ ஓரத்தில் போட்டு அல்லது பழைய பொருள்களை வாங்க வருபவர்களுக்குக் கொடுத்துப் பணம் பெறும் நிலையே காணப்படுகிறது. பழைய பொருள்களை வேண்டப்படாத குப்பையாகப் பார்க்கும் தன்மையே தமிழரிடம் உண்டு.

**இந்திர பாலாவா? சிங்கள பாலாவா?**

பேராசியிரியர் கா.இந்திரபாலா வடக்குக் கிழக்கில் பௌத்த எச்சங்கள் தொடரர்பில் குறிப்பிட்டபோது

## இந்த வாரச் சொல்

# பூசி மெழுகி

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் ''பூசி மெழுகி'' என்கிற சொல் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாக வும் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட விடயம் ஒன்றை மறைப்பது, ஏதேனும் ஒன்று அல்லது பல விடயங்களை மறைத்து அதை வேறொன்றாகக் காட்டுவது, பட்டும் படாமல் கதைப்பது, விடயத்தை நேரடியாகச் சுட்டாமல் மழுப்பலாகக் கதைப்பது ஆகியவற்றையே இவ்வாறு குறிப்பிடுவர்.

''அவள் நல்லாப் பூசி மெழுகிக் கதைப்பாள்''

''அந்தப் பெட்டையின்ர பிரச்சினைய வெளியில சொல்லாமல் நல்லாப் பூசி மெழுகிக் கலியாணம் செய்து வைச்சிட்டாங்கள்''

''அரசியல்வாதிகள் அப்படித்தான் பூசி மெழுகிக் கதைப்பாங்கள்''

''அவன் குடிகாரன் என்பதை வெளியில் சொல்லாமல் ஏதோ பூசி மெழுகிக் கலியாணம் செய்து வைச்சிட்டாங்கள். இனித்தான் அதுகள் படப்போகுதுதுகள்''

''அது நல்லாப் பட்டை அடிச்ச கார்... ஏதோ பூசி மெழுகி நல்ல விலைக்கு வித்துப்போட்டங்கள்''

''சாதகம் பொருத்தமில்லையாம் தரகர் தான் ஏதோ பூசி மெழுகி அலுவலை முடிச்சுப்போட்டார்''

''வெள்ளைக்காரனுக்குப் பூசி மெழுகிக் கதை சொன்னதால நாட்டை விட்டுத் திருப்பி அனுப்பிப் போட்டானாம்''

''அந்த ஆளிட்டப் பூசி மெழுகிக் கதை சொல்ல ஏலாது... அந்தானள் பிடிச்சுப்போடும்''

''நீ ஒன்றும் பூசி மெழுகிக் கதைக்கப்போகாத... உண்மையச் சொல்லு'' இவ்வாறாகப் பூசி மெழுகி என்கிற வார்த்தை பல அர்த்தங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குள்ளேயே அவர் சிங்களவர் சார்பாக வரலாற்றைத் திரிவுபடுத்துகிறார் என்றுகூறி இந்திர பாலா என்ற பெயரை மாற்றி சிங்கள பாலா எனப் பட்டப்பெயர் சூட்டினர். அண்மையில் அதே இந்திரபாலாவின் பெயரில் தொல்லியல் மையம் ஒன்றை யாழ் பல்கலைக்கழகத்தில் திறந்து வைத்திருக்கிறார்கள்.

**பொ.ரகுபதி**

தமிழ் வரலாற்றாசிரியர்கள் மத்தியில் மிக முக்கிய தொல்லியல் ஆராய்ச்சியாளராக விளங்குபவர் பேராசிரியர் பொ.ரகுபதி. பேராசிரியர் அவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தொல்லியல், மானிடவியல், சமூகவியல், தமிழ் ஆகிய துறைகளைக் கற்பித்தார். அதேவேளை ஒரிசாவிலுள்ள உத்தல் பல்கலைக்கழகத்தில் தென்னாசியவியல் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அவரது ஆய்வுத்துறைகளாகத் தென்னாசிய வரலாறு, தொல்லியல், கல்வேட்டியல், பண்பாட்டியல், தமிழியல், சோதிடம் ஆகியன இருந்தன. ஆங்கிலத்திலும் தமிழிலும் 15மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கல்வெட்டுகள் இல்லாதிருப்பதால் யாழ்ப்பாண வரலாற்றை ஆராய முடியாது என்று கதைகூறிய வரலாற்றுப் பேராசிரியர்களுக்குப் பூர்வீக மக்கள் பயன்படுத்திய பொருள்களை வைத்து வரலாற்றைத் தேட முடியும் என்பதை நிரூபித்தவர் அவர். அவரால் எழுதப்பட்ட ''ஏர்ளி செற்றில்மென்ற் இன் யெவ்னா'' (யாழ்ப்பாணத்தின் ஆரம்பக் குடிகள்) என்ற நூலில் இதை ஒப்புவித்திருக்கிறார்.

**யுனெஸ்கோ பாதுகாப்பு**

யுனெஸ்கோவால் மிகப் பழைய தொல்லியல் சின்னம் என வரையறுக்கப்பட்ட பலவற்றுக்கு வர்ணம் பூசிப் புதிதாக்கிய சம்பவங்களும் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளன. ஒரு தொல்லியல் சின்னம் மக்கள் குடியின் பூர்வீகத்தை ஆதாரப்படுத்தும் என்பது தமிழ் அரசியல்வாதிகளுக்கோ அரச நிர்வாகத்திலிருப்பவர்களுக்கோ சமயத் தலைவர்களுக்கோ தெரிந்திருப்பதில்லை. இதனால் பல வரலாற்று முக்கியத்துவம் மிக்க பழைய சின்னங்களை இவர்களே அழித்திருக்கின்றனர்.

இனிவரும் நாள்களில் பக்கச்சார்பற்ற தொல்லியலாளர்கள் கூட இங்கு வந்து ஆய்வு செய்தாலும் மிகப் பழமையான ஆதாரங்கள் தமிழர் சார்பாக வடக்குக் கிழக்கில் கிடைக்க வாய்ப்பில்லை. தமிழரின் வரலாற்றைப் பேணாத மனநிலையே இன்று ஆபத்தான கட்டத்துக்குத் தமிழரைக் கொண்டுவந்து விட்டிருக்கிறது.

இனியாவது வரலாறு, தொல்லியல் சார்பான விடயங்களை அரசியல்வாதிகள் பேசாது அந்தத் துறைசார் அறிஞர்களை வைத்து விவாதிப்பதே நல்லது.



நிர்மலன்

# கஞ்சி தந்த கதாநாயகர்கள்...!

"உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்றொரு முதுமொழி தமிழில் உண்டு. இறுதிப் போரின் அவலத்தை எடுத்துக்காட்டும் ஓர் அடையாளமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியை எம்மவர்கள் முன்னிறுத்துகிறார்கள். முள்ளிவாய்க்காலுக்குள் முடக்கப்பட்ட மக்களைக் குண்டுகள் மாத்திரம் கொல்லவில்லை. உண்ண உணவின்றிப் பசி - பட்டினியால் வாடியும் அவர்கள் இறக்க நேரிட்டது. அந்த நிலையில் உயிர்காத்ததுதான் இந்தக் கஞ்சி. "அரிசியும் உப்புமில்லாவிடினும் (குறைந்த அளவில் நிறையப் பேருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதால்) எமது உயிர்காத்த அவிந்த நீர் அது" என்று அந்தக் கஞ்சி குறித்து இன்றும் நினைவு கூர்கிறார்கள் அங்கு அகப்பட்டு மீண்டவர்கள். அத்தகைய கஞ்சியை அந்த இக்கட்டான - இறுக்கமான சூழலிலும்கூடத் தயாரித்து வழங்கியவர்களை நினைந்து போற்ற மறந்துவிட்டிருக்கிறோம் நாம். மாறாக அரசியல் தேவைகளுக்கும் பலரது சுய புகழ்ச்சிக்குமாகச் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி.

### மக்களுடன் மக்களாக நின்றார்கள்

புலிகளை அழித்தாகவேண்டும் என்ற கங்கணத்தில் களமிறங்கிய அரச படைகளுக்குத் தமிழ் மக்கள் தனியாகத் தெரியவில்லை. அவர்களும் புலிகளாகவே தெரிந்தனர். அதனால் இறுதி நிலப்பரப்பு வரை மக்களையும் அழித்தொழித்து முடக்கினர். இந்த நிலையில் அல்லோல கல்லோலப்பட்ட மக்களுடன் முள்ளிவாய்க்கால்வரை மக்களுடன் மக்களாக நின்று மக்கள் பணியாற்றியவர்கள் இரண்டு தரப்பினரே. தமிழர் மறுவாழ்வுக் கழகம் (ரி.ஆர்.ஓ), தமிழீழ மருத்துவத் துறை ஆகிய அமைப்புகளே அவை. இவ்விரு அமைப்புகளிலும் கடமையாற்றியவர்கள் தமது குடும்பம், உயிர், உடமைகள் எல்லாவற்றையும் மறந்தே இறுதிப்போர்த் தருணத்தில் மக்கள் பணிபுரிந்தனர்.

### மலைபோல் உயர்ந்தனர்

முள்ளிவாய்க்காலில் கஞ்சி காய்ச்சிக் கொடுத்த தமிழர் மறுவாழ்வுக் கழகப் பணியாளர்கள் பலர் போரில் இறந்துபோனார்கள். பலர் அங்கங்களை இழந்தனர். பலர் தமது குடும்பங்களைக் காப்பாற்ற முடியாமல் தவித்தனர். ஆனாலும் மக்கள் பணியாற்றினர். அந்த மகத்தான பணிக்காக அவர்கள் மக்கள் மத்தியில் மலைபோல் உயர்ந்தனர். இப்போது இந்தப் பணியாளர்களில் பலர் அங்கங்களை இழந்த நிலையிலும், வறுமைப்பட்டவர்களாகவும் உள்நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். ஒரு சிலர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் காய்ச்சிக் கொடுத்த கஞ்சியை வைத்துத் தற்போது கஞ்சி அரசியல் செய்பவர்களுக்கு இவர்களின் நிலை கண்ணுக்குத் தெரியாது. காரணம் கஞ்சி அரசியல் செய்பவர்கள் யாரும் முள்ளிவாய்க்கால்வரை சென்றவர்கள்

# மீட்சி... 16

துன்பானந்த சுவாமி



எமது உடலுக்கான உழைப்பை இயந்திரங்கள் நிறைவு செய்துகொண்டிருக்கின்றன. இயந் திரங்கள் இல்லையென்றான ஒரு நாட்பொழுதை கற்பனை செய்வதுகூட முடியாத ஒன்றென ஆகிவிட்டது. இந்தளவிற்கு இயந்திரங்கள் எம்மை ஆக்கிரமித்துவிட்டன என்பதை நாம் உணர்ந்துகொண்டாலும் அவற்றின் பிடியிலிருந்து விடுபடுவதைப்பற்றி எண்ணவே முடியாதுள்ள தல்லவா?

அவசர உலகமென நாமே தீர்மானமெடுத்து இயங்குகிற ஒரு மட்டுப்படுத்தப்பட்ட சட்டகத் துக்குள்ளாக உள்ள ஒரு செயல்வெளியை இட்டு நிரப்ப இயந்திரங்கள் இல்லையென்றால் வாழ்க் கையே இல்லை என்று கூடியமுகிற ஒரு கூட்ட மாக மாறியிருக்கிறோம். எமது நாளாந்த வேலைகளை துயிலெழுவதற்கான மணியொலி தொடக்கம் படுக்கையில் தாலாட்டொலி (தூக் கத்தை வரவைப்பதற்கான மெல்லிசை) வரை யாக நாம் பயன்படுத்துபவை எத்தனை?

'நாம் இயந்திரங்களைக் கண்டுபிடித்தோம்'; என் பது வேண்டுமானால் உண்மையாக இருக்கலாம். அவற்றை 'நாம் இயக்கிப் பயன்படுத்துகிறோம்' என்பது மட்டும் நாம் உணர்ந்து கொள்ளாத பொய்யாகவே இருக்கிறது. அவையே எம்மை இயக்குகின்றன. அவையே எம்மைப் பயன்படுத் துகின்றன. இறுதியில் ஒன்றுக்கும் உதவாததாக்கி சொந்தமாக மூச்சு விடுவதற்குக்கூட இயலாதவர் களாக்கிப் போட்டுவிடுகிறது.

இயந்திரங்கள் எங்களைப் பயன்படுத்துகின்றன என்பது இதுதான். இயந்திரங்கள் தங்களது ஆளிகளை(சுவிடச்) மெதுவாக அழுத்துவதற்கே எம்மை அனுமதிக்கின்றன. எமது உடலுழைப்பை சாதனங்கள் இலகுவாக்குவதாக நம்பிக்கொண்டு சாதனங்களால்

எமது உடலியக்கமானது வெறுமனே முடக்கப் பட்டுவிடுகிறது என்பதை உணரமுடியாதவாறு எமது எண்ணங்களும் முடக்கப்பட்டுவிட்டன. எமக்கெ அதாவது மனிதகுலத்திற்கே தனித்துவ மான சிந்தனையாற்றலைக்கூட சாதனங்கள்

அல்ல. இனியாவது, தமிழர் மறுவாழ்வுக்கழக உறுப்பினர் கள் அதிலும் குறிப்பாகத் தாய கத்தில் வாழ்ந்து கொண்டிருப்ப வர்கள் மதிக்கப்படவேண்டும். அவர்களின் வறுமையும் அங்கவீனமுற்ற வாழ்க்கையும் கண்டுகொள்ளப்பட்டு நிவார ணம் அளிக்கப்பட வேண்டும்.

**பயந்தோடியவர்களின் மேடை நடிப்பு**

முள்ளிவாய்க்கால் கஞ்சி, இறுதிப்போர் நினைவுச்சுடர் ஏற்றல் போன்ற நாடகங்களைத் தற்போது நடித்துக்காட்டும் சிவாஜிலிங்கம், செல்வராசா கஜேந்திரன், சிறிதரன் மற்றும் அவர்தம் ஆதரவாளர்கள் தற்போது தம்மைப் புலிகள் என்று காட்டிக்கொள்கிறார்கள். ஆனால், புலிகளுக்குப் பயந்து முள்ளிவாய்க்காலுக்குள் அகப் பட முன்னரே படையினரிடம் சரணடைந்தார்கள். இதில் பலர் 2006க்கு முன்னரே வன்னியை விட்டு வெளியேறியிருந்தனர். இவர்களில யாரும் முள்ளி வாய்க்காலுக்குள் அகப்பட்டு வட்டுவாகல் பாலத்தால் வெளி யேறியவர்கள் அல்ல. இறுதி வரை புலிகளுடன் நின்றவர்க ளும் அல்ல.

முள்ளிவாய்க்கால் கஞ்சி யைச் சிரட்டையில் குடிப்பதற்கு அங்கு சிரட்டை இருக்க வில்லை. தேங்காய் வாங்குவ தற்காக முச்சக்கரவண்டி ஒன் றைப் பண்டமாற்றாகக் கொடுத்த சம்பவங்களும் நடந்தன. அந்த நெருக்கடியான சூழலில் தமிழர் மறுவாழ்வுக் கழகம் எவ்வாறான கஞ்சியைக் காய்ச்சிக் கொடுத்தது என்பது கூட இவர்களில் பலருக்குத் தெரியாது. முள்ளிவாய்க்கால் கஞ்சியின் கதாநாயகர்களை மறைத்து மேடையேறியிருக்கும் அரசியல்வாதிகளை மக்கள் புறமெதுக்க வேண்டும். இதில் மதிக்கப்பட வேண்டியது தமிழர் மறுவாழ்வுக் கழகப் பணியாளர்கள் மாத்திரமே.



ஆக்கிரமித்துவிட்டன. மனக்கணிதம் என்கிற அடிப்படை எண்ணறிவைக் கூட சரிவரக் கையாளமுடியாத உயிரிகளாக மாற்றப்பட கணிப்பான் பொறிகளது வருகை காரணமாகி விட்டது. அத்தோடு மனனம் செய்வது கூடாது என்கிற அளவிற்கு சிந்தனை வறுமைக்கு உட்பட்டுவிட்டிருக்கிறோம். ஆகமொத்தம் கணிப்பான்கள் இல்லையென்றால் எமது எண் செயற்பாடுகள் முடங்கிவிடும். அவ்வளவுதான். உடலினது இயக்கப் பகுதியான எண்ணப்பகுதி முடக்கப்பட்டு அது எந்த வேலையுமின்றிக் கிடந்து ஒரு கட்டத்தில் செயற்படவே முடியாதநிலையை அடைந்து விடும்.



உடலினை இயக்குகிற எமது எண்ணம் முடங்கிவிடுகிறபோது உடலினது ஏனைய செயற்பாடுகளும் ஓய்ந்து விடுவது வழக்கமானது. தேவையென்கிறஒன்று எழும்போது செயற்பாடு தவிர்க்கவே முடியாததாகிறது. ஆனால் செயற்பாட்டிற்கான தேவை மட்டுப்படுத்தப்பட்டு அல்லது இல்லாமலாக்கி விடப்பட்டுள்ள நிலை இயந்திர மற்றும் சாதனங்களால் ஆக்கப்பட்டுவிட்டது. சிந்தனைக்கும் வேலையில்லை. உடலுழைப்பிற்கும் தேவையில்லை. இயந்திர சாதனங்கள் இல்லையென்றால் வாழ்க்கை இல்லை என்கிற புலம்பலில் இருக்கிற உண்மையின் தன்மை இதுதான். அது உண்மைதான் என நம்புகிற விதமாகவே எமது எண்ணங்கள் வனையப்பட்டிருக்கின்றன. காலத்துக்குக் காலம் இற்றைப்படுத்தும் விதமான தொடர் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. இதனால் எமது உடலியக்கமும் மூளையினது இயக்கமும் முடக்கப்படுகின்றன என்பது மறைக்கப்படுகிறது. நாம் எமது உடலிற்கான பயிற்சியை இயல்பான நிலையிலிருந்து விலகி செயற்கையாக எமது பொருளாதார மேம்பாட்டுக்கு எந்தவிதத்திலும் தொடர்பற்ற முறையில் வழங்கிக் கொண்டிருக்கிறோம். மனதிற்கான பயிற்சியும் அவ்வாறாகவே வலிந்த விதமாகவே வழங்கப்படுகிறது. உடலோ மனமோ இயல்பை மீறி வலிந்து பயிற்சியளிக்கப்படுகிற சூழலில் செயற்கைகளுக்கே இயல்பாக்கடைந்து வருகின்றன.

**மனக்கணிதம் என்கிற அடிப்படை எண்ணறிவைக் கூட சரிவரக் கையாளமுடியாத உயிரிகளாக மாற்றப்பட கணிப்பான் பொறிகளது வருகை காரணமாகி விட்டது.**

இப்படியாக உடலும் மனமும் சோம்பேறிகளாக்கப்படும் செயலொழுங்கானது படிமுறைகளாக எம்மீது ஆதிக்கம் செலுத்துகிறது. நாமும் அவ்வாறான நிலையை அறிந்தோ அறியாமலோ ஏற்றுக்கொள்கிறோம். ஏற்றுக்கொள்ள வைக்கப்படுகிறோம். இயந்திரங்களது விளைவுகள் எப்படியானவை? புரிந்திருக்கிறதா? பேச இன்னும் நிறையவே உள்ளன





# சுடலை வரை யாரோ...?

பூராசா

அண்மையில் நான் சாவு வீடு ஒன்றுக்குச் சென்றிருந்தேன். வித்தியாசமான சம்பவங்கள் பலதை அங்கு கவனித்தேன். பறை மேளம் பிடிக்கவில்லை, ட்ரம் செற் அடிக்கவில்லை. ஒலி பெருக்கி அறிவிப்புச் செய்யவில்லை. சடலத்தைக் கொண்டு செல்லும்போது வெடி கூடக் கொழுத்தவில்லை. இவையெல்லாமும் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. காரணம், அண்மைக்காலங்களில் இத்தகைய சம்பவங்கள் பல சாவு வீடுகளில் அரங்கேறிப் பல அசௌகரியங்களையும், அட்டூழியங்களையும் நிகழ்த்தி வருவதைக் கடந்த காலங்களில் கண்டு வந்திருக்கிறேன். ஆனால், அவை எல்லாவற்றுக்கும் மாறாக இருந்தன இந்த இறப்பு வீட்டு நிகழ்வுகள். அது பற்றிப் பின்னர் அந்த வீட்டுக்காரரிடம் கேட்டபோது, "எங்கட செத்த வீட்டுக்கு வந்தவர்கள் அப்பாவின் பூதவுடலுடன் சுடலை வரை சென்று கஸ்ரப்பட்டோம் என்று கூறவோ... இறந்த அப்பாவைத் திட்டவோ இடமளிக்கக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு செய்தோம்" என்றனர். ஆம்...! அவர்கள் கூறியது முற்றிலும் உண்மைதான்... நான்கூடப் பல தடவைகள் இறப்பு வீடுகளை ஒப்பேற்றிய பலரைத் திட்டியிருக்கிறேன். அதற்குக் காரணங்கள் பல. மற்றவர்களுக்குப் பாதிப்பில்லாமல் தமது காரியங்களைச் செய்யாமை, இறந்தவருக்கு மதிப்பளிக்காமல் நட்ட நடு வீதியில் அவரது பிணத்தை வைத்துக்கொண்டு "போதைக் கூத்தாடுவது" எனப் பலதுமே என்னை அப்படித் திட்ட வைத்தன. ஆனால் அவற்றுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைத்திருந்தனர் அந்த வீட்டுக்காரர்.

### வீதியில் சடலம் படும் துன்பம்

இறப்பு வீட்டிலிருந்து சடலத்தை வெளியே எடுத்த பின்னர் இறந்த அந்த உடலை ஒரு குழுவினர் தமது கைக்கு எடுத்துவிடுகின்றனர். அதன் பின்னர் தான் அந்த அநியாயங்கள் நடந்தேறுகின்றன. பெரிய அளவில் வெடிகளைக் கொழுத்திப் போடுவார்கள். அது எழுப்பும் சத்தம் மூலம் சுற்றத்தினர், சுற்றுவட்டாரத்தில் இருப்பவர்களை அருவருக்கச் செய்வார்கள். வீதிகளில் பயணிப்போருக்கும் இதன் மூலம் இடைஞ்சலை ஏற்படுத்துவார்கள். இதைவிடப் பறை, ட்ரம்செற் ஆகியவற்றை அட்டகாசமாக அடிப்பார்கள். ஒவ்வொரு சந்திகள், வீதிகளின் சில பகுதிகளில் சாவு ஊர்வலத்தை நிறுத்தி வெயிலில் காக்க வைத்துப் பறையை அடித்துப் பட்டையைக் கிளப்புவார்கள். போதை தலைக்கேறிய நிலையில் ஒவ்வொருவரும் பணத் தாள்களைப் பறையடிப்பவர்களின் சட்டைப் பைக்குள் வைத்து அவர்களுக்கு உசாரூட்டிப் பறையடிக்கச் செய்ய அவர்களும் தமக்குள் போட்டிப் பாசாங்கு செய்து பறையடித்துப் போதையிலுள்ளவர்களுக்குத் தென் பூட்டுவர். இந்தச் செயல்களால் பூதவுடல் நட்ட நடு வீதியில் கிடந்து பல மணிநேரம் ஊசலாடும். உச்சி வெயிலில் ஊர்வலமாக வரும் உறவினர்கள், நண்பர்கள், அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் பெரும் அவஸ்தையில் துடிப்பர். அந்த இடத்திலிருந்து புறப்படுமாறு செத்த வீட்டுக்காரர் கூறினால்கூட அது எங்களுக்குத் தெரியும் பு... என்று போதை தலைக்கேறியவர்களின் பதில் இருக்கும். இறந்தவர் எவராயினும் அவரது சடலத்தை நடு வீதியில் வைத்து அல்லோல கல்லோலப்படும் அவலநிலையாக அது இருக்கும்.

### பறை பிடிப்பதில்லை

உறவுகளை இழந்த குடும்பத்துக்கு ஆறுதல் சொல்லவும், அவர்களது மனதுக்கு நிம்மதியளிப்பதற்குமே இறப்பு வீட்டுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால், இறப்பு வீட்டைச் சாட்டாக வைத்துப் போதைப் பிரியர்கள் தமக்கு வேண்டிய பல சம்பவங்களை நிகழ்த்துகிறார்கள். தமது எண்ணத்துக்கு எல்லாவற்றையும் செய்கிறார்கள். உறவை இழந்த குடும்பத்தினர் சோகத்தில் மூழ்கியிருப்பதைப் பயன்படுத்தித் தம்

மைக் கவனிக்கவோ, கேள்வி கேட்கவோ யாரும் இல்லை என்ற நிலையில் இந்தக் குழுவினர் தமது தேவையை நிறைவேற்றி விடுகின்றனர். பின்னர் தான் இறப்பு வீட்டுக்காரர்களுக்கு நிலமை தெரியவருகிறது. இதனால், பல ஊர்களில் சாவு வீட்டின்போது பறை பிடிப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கிறார்கள். சாவு வீட்டுக்குச் சம்பிரதாயமாக, விழுமியமாகப் பறை அடிப்பது இருந்தாலும் தற்போதைய சூழலில் அது அவசியமில்லை என்பதைப் பலர் கடைப்பிடிப்பது தெரிகிறது. அதற்குக் காரணம் பறை விடயத்தில் அவர்களுக்கு இருக்கிற தகாத மனப் பதிவுகளே.



**இனி இவங்களைச் சமாளிக்க ஏலாது**

இறப்பைக் கேள்விப்பட்டுத் தூர இடங்களில் இருந்துகூட இறப்பு வீட்டுக்காக வருகின்ற வழக்கம் நம்மவர் மத்தியில் உண்டு. நாளாந்தக் கடமைகளில் ஈடுபடுபவர்களாக இருப்பினும் ஒருவர் இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டதும், தமது கடமைகளை எல்லாம் கிடப்பில் போட்டுவிட்டு ஓடிச் செல்கின்றனர். பிணத்தை எடுத்த பின்னர் சுடலைக்கு ஒரு தடவை போய் வருவோம் என்று அவர்கள் முடிவெடுத்தாலும் வீட்டை விட்டுச் சடலம் தூக்கிச் செல்லப்பட்டு முதலாவது சந்தியில் வைத்துப் பறையும் ட்ரம்பும் அடிப்பதை வைத்து இன்னும் எத்தனை சந்திகள் உண்டு இவ்வாறு சென்றால் சுடலையைப் போய்ச்சேர எத்தனை மணியாகும் என்று கணக்குப் பண்ணிவிட்டுப் பலர் வீடு திரும்பி விடுகின் றனர். இனிப்போய் வெறியில நிக்கிற இவங்களோட சமாளிக்க ஏலாது என்ற மனச் சோர்வுடன் சுடலை வரை செல்லாது திரும்பி விடுகின்றனர். இதனால் பூதவுடலுடன் சுடலை வரை ஊர்வலமாகச் செல்லும் பழங்கால வழக்கம் குறைந்து விட்டது.

> **முரண்பாடுகள் காரணமாகவே பலர் சுடலைக்குச் செல்லும் நடைமுறையைக் கைவிட்டு விட்டார்கள்**

**வெறும் கழுத்தோட போக ஏலாது**

பல பெண்கள் செத்தவீட்டுக்குப் போவதற்கு ஆயத்தமாகும்போது வெறும் கழுத்தோட எப்படிப் போவது என்கிற பிரச்சினையைக் கையில் எடுத்து தாலிக்கொடி, துணைக்கு இன்னோர் சங்கிலி, காப்பு என அணிந்தவாறே செத்த வீடுகளுக்குச் செல்கிறார்கள். தமது உறவை இழந்த நிலையிலிருக்கும் அந்த வீட்டுக்காரர் இதைப் பொருட்படுத்துவதில்லை. அங்கு வருவோருக்குத் தமது செல்வாக்கைக் காட்டும் விடயமாகவே இது இருக்கிறது. சோகம் குடிகொண்டிருக்கும் இடத்தில் ஆபரணங்கள், நகைகளுடன் வருவோரைக் கண்டால் இவர்கள் செத்த வீட்டுக்கு வராமலே விட்டிருக்கலாம் என்ற எண்ணமே அந்த வீட்டுக்காரருக்குத் தோன்றும். இந்த நகை அணியும் பழக்கம் மற்றவர்களின் மனதைப் பாதிக்கும் என்பதைப் பலரும் உணர்ந்துகொள்வதில்லை.

**சுடலையில் முரண்பாடுகள்**

வீட்டிலிருந்து புறப்பட்ட சாவு ஊர்வலம் பல மணி நேரத்தின் பின்பே சுடலையைச் சென்றடைகிறது. அதன் பின் நடக்கின்ற சடங்குகளிலும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக கருத்துச்சொல்வதால் அங்கு குழப்பங்கள் நிகழ்கின்றன. போதாக்குறைக்குப் போதை தலைக்கேறி விடுவதால் முரண்பாடுகள் அதிகரிக்கின்றன. இறப்பு நிகழ்ந்த கும்பம் அங்கும் துன்பப்பட வேண்டிய நிலையே காணப்படுகிறது.

இத்தகைய முரண்பாடுகள் காரணமாகவே பலர் சுடலைக்குச் செல்லும் நடைமுறையைக் கைவிட்டு விட்டார்கள். முன்னைய காலங்களில் பிணத்தைப் பாடையில் வைத்துச் சுடலை வரை தூக்கிச் செல்லும் நடைமுறையே இருந்தது. தற்போது அந்திய காலச் சேவை வாகனங்களில் பிணத்தை ஏற்றிச் செல்வதால் யாரும் சுடலை வரை வரவில்லை என்று குறைப்படுவதும் குறைந்துகொண்டு வருகிறது. இதைவிட இறந்தவருக்கு வெளிநாட்டில் பிள்ளைகள், உறவுகள் யாராவது இருந்தாலோ, உள்ளூரில் பண பலமுள்ளவர்களாக இருந்தாலோ அந்த இறப்பு வீட்டில் மேற்சொன்ன குளறுபடிகள் அளவுக்கதிகமாக நிகழ்கின்றன. இறப்பு வீடு என்று சொன்னாலே முகம் சுழிக்கும் நிலைக்குப் பலர் வந்திருக்கிறார்கள். பணமும், போதையும் காரணமாக இறந்தவரின் சடலம் வீதியில் கிடந்து அலைந்துலைந்து சுடலையைச் சென்றடைந்து எரிக்கப்படுவது பெரும் கன்றாவிக் காட்சியாகிவிட்டது.



தர்மராசா

சிறைக்குள்...

114

# பீதியைக் கிளப்பிய கறுத்த உருவம்

**15.7.2002**அன்று கொழும்பு மேல் நீதி மன்றத்தால் நான்கு கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அதில் **3**பேருக்குக் கால வரையறையற்ற தடுப்புக்காவல் உத்தரவு நீக்கப்படாதிருந்தது. அதனால் அவர்கள் மீண்டும் சிறைக்குக் கொண்டு வரப்பட்டனர். **16.7.2002**அன்று குடும்ப மறுவாழ்வு அமைப்பின் (பமிலி றீகாபிளிட்டேசன் சென்ரர்) அனுசரணையுடன் மருத்துவர்கள் பலர் கொழும்பிலிருந்து களுத்துறைச் சிறைச்சாலைக்கு வந்தனர். அங்கிருந்த கைதிகளைப் பரிசோதித்து மருத்து வழங்கினார்கள்.

**19.7.2002**அன்று இரவு **11.45**அளவில் அதிர்ச்சியான சம்பவம் ஒன்று பி**6** வார்ட்டில் நடந்தது. மரினோ என்ற நண்பர் நித்திரையிலிருந்தபோது யாரோ அவரது நெற்றிப் பொட்டில் குத்துவதுபோல இருந்ததாம்...! அவர் கண் விழித்தபோது, முன்பு ஒரு தடவை அவர் கண்ட அந்தப் பெரிய கறுத்த உருவம் அவரது கால் பக்கம் குத்துவதைக் கண்டாராம்...! அவர் உடனடியாகக் காலை மடக்கிக் கொண்டு தலைப்பக்கமிருந்த பிளாஸ்ரிக் தண்ணீர்ப்போத்தலை எடுத்து அந்த உருவத்துக்கு எறிந்தாராம்...! அந்தச் சத்தம் கேட்டு அங்கிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த பிரபா என்கிற கைதி விழித்தாராம்...! அப்போது பெரிய சாக்குப்போல கறுப்பு உருவம் ஆடி ஆடி ஓடிப் போவதையும் மரினோ மீண்டும் தண்ணீர்ப் போதத்தலை அதை நோக்கி எறிவதையும் கண்டு அவரும் பெரிதாகக் கத்தினாராம்...! இந்தச் சத்தம் கேட்டு என்னருகில் படுத்திருந்த ராமகிருஷ்ணர் என்ற நண்பர் அந்த உருவம் மறையும்வரை அதைப் பாத்தாராம்...! எல்லோரும் சேர்ந்து கத்திக்கொண்டிருந்ததால் நித்திரையில் கிடந்த நான் திடுக்கிட்டு எழுந்தேன். அதன் பின்னரே மேற்படி விடயங்கள் தெரியவந்தன.

அப்போது சின்னவன் என்ற கைதி மரினோவைக் கட்டிப்பிடித்துக்கொண்டிருந்தான். மற்றவர்கள் திகிலடைந்திருந்தார்கள். உருவம் ஓடி மறைந்த கழிப்பறைப் பக்கம் மின்குமிழ் எரிந்துகொண்டிருந்தது. அன்றைய நாளில் பி**6**

வாட்டில் 21பேர் இருந்தோம். நான், ரங்கன் மற்றும் ஒரு சிலர் தான் கத்தவில்லை. எனக்கு அந்தச் சம்பவத்தை நம்புவதா? விடுவதா? என்று தெரியவில்லை. ஒரு விடயத்தை ஒருவர் கூறுவதற்கும் 3பேர் ஒருமித்து உண்மை என்று கூறுவதற்கும் வித்தியாசம் உண்டல்லாவா...,? அதனால் குழம்பிப் போனேன்.

உணவுதவிர்ப்புப் போராட்;டத்தில் கைதிகள் ஈடுபடுவதற்கு ஆயத்தமாவது பற்றிய செய்தி ஊடகங்களில் அடிபடுவதால் சிறைச்சாலைக்குள் யாரோ புகுந்து கைதிகளை வெட்டுகிறார்கள் என்பதாகவே திடுக்கிட்டு எழுந்த நான் நினைத்தேன். பின்னர் கணப்பொழுதில் அவர்களின் பேச்சுகளில் இருந்து அதற்குக் காரணம் பேய் என்று உணர்ந்து கொண்டேன். எனது எதிர்பார்ப்புடன் ஒப்பிடும் போது பேய் பரவாயில்லை என்று நினைத்தேன்.

மரினோ அதிர்ச்சியுடன் இருந்தான். கோழிக் கூட்டுக்குள் இரவு நேரம் மரநாய் புகுந்தால் கோழிகள் பயமும் அச்சமும் அடைவதுபோல பி6 வாரட்டிருலிருந்த கைதிகள் இருந்தார்கள். எனக்குப் பயப்பிட அவகாசம் கிடைக்கவில்லை. நான் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவில்லை. சரிந்து கிடந்தவாறு கதைத்துக்கொண்டிருந்தேன்.

சிறைச்சாலை ஊழியர்கள் ஓடிவந்து கதவைத் திறக்காமலே 21 கைதிகளும் இருக்கிறார்களா என்று எண்ணினார்கள். ஒருவர் நித்திரைபோல கிடந்தார். அவரையும் எழுப்பச் சொன்னார்கள். அவர் தலையை எட்டிப்பார்த்தபோது அவர் உயிருடன் இருப்பதை உறுதிப்படுத்திவிட்டுப் போய் விட்டார்கள். பின்னர் அன்று இரவுக் கடமையிலிருந்த உடவத்தை என்ற ஜெயிலர் அதிகாலை 1.30 மணியளவில் வந்து கதவைத் திறந்து எல்லோரையும் எண்ணிப்பார்த்துவிட்டுக் கழிப்பறைப் பக்கம் எல்லாம் போய்ப் பார்த்தார். அப்படி ஒன்றும் இல்லை என்றும் பயப்பிட வேண்டாம் என்றும் சொல்லிவிட்டுச் சென்றார்.

பயம் காரணமாகச் சில கைதிகளுக்கு நெஞ்சுக்குத்து, மயக்கம் என்றெல்லாம் திடீர் வருத்தங்கள் முளைத்தன. சிலர் விடியும் வரை நித்திரை கொள்ளாமல் இருப்பது என்று கதைத்துக்கொண்டிருந்தனர். மண்டபத்திலிருந்த மின்குழிழை அணைக்கக்கூடப் பலர் சம்மதிக்கவில்லை. ஆனால், கைதிகளுக்கிடையில் ஏதோ கொலை முயற்சி நடந்து அது முறியடிக்கப்பட்டுவிட்டது என்றும் அதையே பேய் என்று மாற்றிவிட்டார்கள் என்றுமே சிறை நிர்வாகம் சந்தேகித்தது. மறுநாள் மாலையில் கைதிகளை உள்ளே வைத்துப் பூட்டிய பின்பும் சிறை ஊழியர்கள் அடிக்கடி வந்து நிலமைகளை அவதானத்தார்கள். மறுநாள் 21.7.2002 அன்று பி6 காம்பிறாப் பாட்டியையும் அகிலன் என்ற கைதியையும் கூப்பிட்டு ஒரு ஜெயிலர் விசாரித்து அறிக்கை ஒன்றை எழுதி அதில் கையெழுத்துப்போடுமாறு கேட்டார். "எனக்குச் சிங்களம் தெரியாது. மேலே உள்ளது என்னவென்றும் தெரியாது" என்று தமிழில் எழுதிவிட்டுக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தேன் என்று அகிலன் பின்னர் என்னிடம் கூறினார். அவர் மரினோவைக் கொல்ல முயற்சித்தார் என்று சிறை நிர்வாகம் சந்தேகிக்கிறது என்றும் கூறினார். (தொடரும்)



# "புலிகளைப் பொறிக்குள் சிக்க வைத்தவர் ரணில்"

மேஜரர் ஜெனரல் நிஸங்க ரணவண என்பவர் இலங்கைப் படைத்துறை அதிகாரியாகப் பயிற்சிபெற்று இலங்கைப் படைப் பிரிவின் 55ஆவது பிரிவில் கடமையாற்றியவர். பின்னர் மேஜர் ஜெனரல் ஆக அதிலிருந்து ஓய்வு பெற்றவர். அப்போதைய யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதிக்கு அடுத்த நிலை அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்தவர். 55ஆவது படைப் பிரிவினருடன் யாழ்ப்பாணத்திலிருந்து நந்திக்கடல் வரை நகர்ந்து சென்று இறுதிப்போரின் இறுதி நாள்வரை பணியில் ஈடுபட்டவர். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சடலத்தைக் கைப்பற்றியதும் தனது படையணியே என்கிறார் அவர். தனது போர் அனுபவங்களை அவர் நளின் ராஜபக்ச என்ற யூரியூப் தளத்தில் கீழ்வருமாறு பதிவு செய்திருந்தார்...

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

**சமாதானப் பேச்சுக்கள்**

போர் எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது என்பதைப் பற்றிப் பேசுவதற்கு முன்னர் அதற்குக் காரணமாகவிருந்த சமாதானப் பேச்சுகள் தொடர்பிலேயே முதலில் பேச வேண்டும். உண்மையில் இதுவிடயத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் முதலில் நன்றிகூற வேண்டும். இந்த நாட்டில் ஒரு பயங்கரவாதத் தரப்பினர் சட்டரீதியற்ற முறையில் நடத்திய சண்டையை நிறுத்தியவர் ரணில் விக்கிரமசிங்கவே. புலிகளுக்கு அடிக்காமல் மிக நுட்பமாக அவர்களைப் பொறிக்குள் சிக்க வைத்தவர் அவர். ஓர் அமெரிக்கப் பெண்மணி யாழ்ப்பாணத்துக்கு வானூர்தி மூலம் வந்து பின்னர் கிளிநொச்சிக்குச் சென்று அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்தார். அதுவே புலிகளுக்குப் போடப்பட்ட முதல் வியூகமாகும். ஒரு கெரில்லா அமைப்பைப் போர் செய்யாமல் வைத்துக்கொள்ள முடியாது என்ற அடிப்படைச் சித்தாந்தத்தைப் புலிகள் இதன் மூலம்

## சரத்பொன்சேகாவின் புதிய பயிற்சியின் மூலம் புலிகள் யாழ்ப்பாணத்துக்குள் நுழைவது தடுக்கப்பட்டது

இழந்தார்கள்.

சமாதானச் சூழல் ஏற்படுத்தப்பட்டதால் புலிகளின் போரியல் எண்ணமும் மாறியது. அவர்கள் போராடும் நிலையை மறந்து கொம்பியூட்டர் வாங்குவதிலும் சொகுசு வாகனங்களை வாங்குவதிலுமே அதிக அக்கறை செலுத்தினார்கள்.

**சரத்பொன்சேகாவின் வியூகம்**

படைத் தளபதியாகவிருந்த சரத்பொன்சேகா சமாதானச் சூழல் ஆரம்பித்தவுடனேயே எஸ்.ஐ.யு (ஸ்பெசல் இன்ஹான்றி யுனிற்) என்ற புதிய படை வியூகம் ஒன்றை ஆரம்பித்தார். பொதுவாகப் புலிகளின் தாக்குதல்கள் இரவு நேரங்களில் இடம்பெறுவதால் அதற்கு முகம் கொடுப்பதில் படையினருக்குப் பிரச்சினைகள் இருந்தன. அதிக இழப்புகள் ஏற்பட்டன. அதை எவ்வாறு சீர்செய்வது என்பதிலேயே சரத்பொன்சேகாவின் முழுக் கவனமும் இருந்தது. அவர் ஒவ்வொரு வாரமும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து சிப்பாய்களுக்கு இரவில் தொடர் பயிற்சி வழங்குவதில் அக்கறை செலுத்தினார்.

சமாதானச் சூழல் ஒன்று நிலவும் சந்தர்ப்பத்தில் ஏன் படையினருக்குத் தொடர் பயிற்சி வழங்கப்படவேண்டும் என்ற சந்தேகம் உயர் அதிகாரிகளாக இருந்த எமக்கே ஏற்பட்டது. சமாதான காலத்தில் படையினர் எந்தச் செயற்பாட்டிலும் இல்லாது இருக்கக்கூடாது என்பதில் சரத் பொன்சேகா குறியாக இருந்தார். இரவு முழுதும் படையணிகளுக்குப் பயிற்சி வழங்கியதால் பகல் நேரத்தில் பெரும்பகுதியைப் படையினர் நித்திரையில் கழித்தனர். என்ன நடக்கிறது? ஏன் இப்படிச் சரத்பொன்சேகா செய்கிறார்? என்பது படையினருக்கும் புரியவில்லை. வழமைக்கு மாறாகப் படையினரைப் பத்துப்பேர் கொண்ட சிறு குழுக்களாகப் பிரித்தார். இந்தச் சிறுகுழுவில் சினைப்பர்காரர் ஒருவர், குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர், பொறியியல் பிரிவினர் எனப் பலதுறை சார்ந்தவர்கள் இணைக்கப்பட்டனர். இதன் மூலம் அதுவரை இல்லாத ஒரு புதிய சண்டை முறைக்குப் படையினர் பயிற்றப்பட்டனர்.





**அரசதலைவர் சந்திரிக்காவின் பங்களிப்பு**

படையினர் போர் புரிவதற்கு எவ்வாறான வசதிகள் போதாமலிருந்தனவோ அவை எல்லாவற்றையும் அரச தலைவர் சந்திரிகாவே பெற்றுத் தந்தார். தேவையான அளவு ராடர்கள், ஆட்லறிகள், போர் வானூர்திகள் எனப் பலவற்றையும் பெற்றுத் தந்து படையினரின் செயற்பாட்டைப் பலப்படுத்தினார். சரத்பொன்சேகாவின் புதிய வியூகம் மாவிலாறு சண்டையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்தப் போருக்கு முன்னர் 57, 5ஏ, 61, 555, 557 எனப் பத்துப் படையணிகளை உருவாக்கியிருந்தார். இந்தப் படையணிகளே வவுனியாவிலிருந்து வன்னி நோக்கிய படை நகர்வுகளை மேற்கொண்டன.

இந்த வன்னிப் படையெடுப்புக்குச் சமாந்தரமாக யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தக்க வைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இது யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. நாங்கள் ஒரு போதும் யாழ்ப்பாணத்தைக் கைவிடத் தயாராக இருக்கவில்லை. அப்போது யாழ்ப்பாணத்தில் இரண்டு பழைய படையணிகளே இருந்தன.

சரத்பொன்சேகாவின் புதிய பயிற்சியின் மூலம் புலிகள் யாழ்ப்பாணத்துக்குள் நுழைவது தடுக்கப்பட்டது. புலிகள் ஏற்கனவே கையாண்ட சகல யுக்திகளையும் தோற்கடிக்கும் சக்தியைப் படையினர் பெற்றுக்கொண்டனர். இந்தத் தடுப்புப் போரில் மட்டும் 70அதிகாரிகளையும் 700க்கு மேற்பட்ட சிப்பாய்களையும் இழந்தோம். வடபகுதியிலிருந்து படையினர் நந்திக்கடல் நோக்கி முன்னேற ஆரம்பித்தனர். 57, 58, 59 ஆகிய படையணிகள் இதில் களமிறங்கின. சரத்பொன்சேகா ஒவ்வொரு தாக்குதல்களின்போதும் படையினரில் எத்தனைபேர் சாவடைந்தார்கள்? எத்தனைபேர் காயப்பட்டார்கள்? என்றே எம்மிடம் கேட்டார். அந்தத் தொகை அவர் ஏற்கனவே திட்டமிட்ட அளவிலேயே இருந்தது.

(மிகுதி அடுத்த வாரம்)



# பாயும் ஒளி நீ எனக்கு

## முற்றிலும் செயற்கை



**கதை**

தனது நண்பருடன் இணைந்து தொழில் புரிந்து கொண்டிருக்கின்ற அரவிந்த்தால் (விக்ரம் பிரபு) சிறு வயதில் நிகழ்ந்த விபத்தின் காரணமாகக் குறைந்த ஒளியில் பார்க்க முடியாது. இப்படியான பிரச்சினையை எதிர்கொண்டு வரும் அவர், ஒருநாள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படும் பெண் ஒருவரை ரவுடிகளிடமிருந்து மீட்கிறார். அதன் எதிரொலியாக அவரைப் பழிவாங்க ஒரு கூட்டம் திட்டம் தீட்ட, மறுபுறம் அவரது சித்தப்பா கொலை செய்யப்படுகிறார். தன்னைச் சுற்றி நடப்பது புரியாமல் தவிக்கும் அரவிந்த் ஒரு கட்டத்துக்குப் பின் குற்றவாளிகளை நெருங்கி தனது இழப்புக்கு எப்படி பழிதீர்க்கிறார் என்பதுதான் மீதிக்கதை.

குறைந்த ஒளியில் பார்க்க முடியாமல் தவிக்கும் நாயகனின் பலவீனத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் எதிரிகள், அவர்களை பழி தீர்க்க போராடும் நாயகன் என்ற சுவாரஸ்யமான கதையை எழுதியிருக்கிறார் இயக்குநர் கார்த்திக் அத்வைத்.

**பலம் - பலவீனம்**

படத்தின் பெரும் பிரச்சினையாகப் பல இருக்கின்றன. உதாரணமாக விரைவில் கொல்லப்படும் ஒரு கதாபாத்திரம் மற்றொரு முதன்மைக் கதா பாத்திரத்தின் மீது திடீரென அன்பை பொழிவது, பகலில் காட்டப்படும் ஒரு காட்சி நாயகனின் விழித்திறன் பிரச்சினையை பார்வையாளர்களுக்கு கடத்துவதற்காகவே உடனே அடுத்த காட்சி இரவுக் காட்சியாக மாற்றப் படுவது, வில்லன் - நாயகன் மோதலைக் காட்ட குடும்பத்தை வெளிநாட் டுக்கு அனுப்புவது என படம் கதையின் போக்கில் நகராமல் காட்சி களுக்கு தகுந்தவாறு வளைக்கப்பட்டிருப்பது ஒருவித செயற்கைத் தன்மையை கூட்டிவிடுகிறது. கதைக்கு எந்த வகையிலும் பயன்கொ டுக்காத காதலும், அதற்கான பாடலும் அயற்சி.

குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் இரண்டாம் பாதியின் விசார ணைக் காட்சிகள் கிஞ்சித்தும் சுவாரஸ்யம் கூட்டவில்லை. அதற்கு காரணம் பலவீனமான வில்லன் கதாபாத்திரம். வசனங்களால்

மட்டுமே பில்டப் கொடுக்கப்படுகிறதே தவிர்த்து காட்சிகளால் அதற்கு நியாயம் சேர்க்கவில்லை. இதற்கு நடுவில் திடீரென மழைக் காளான் போல முளைக்கும் அழுத்தமில்லாத இறந்தகாலக் காட்சி மற்றொரு புறம் இறுதிக் காட்சியில் வில்லனுக்குப் பொறி வைப்பதெல்லாம் பழங் காலத்துத் திட்டம்.

**பாத்திரங்கள்**

தன்னுடைய நேர்த்தியான நடிப்பால் படத்தை ஒரே ஆளாக இழுத்து செல்கிறார் விக்ரம் பிரபு. ஒளி பிரச்சினையால் அவதிப்படும் அவர் 'ஒலி'யால் எதிரிகளை கண்டுபிடித்து நெருங்குவது, ஆக்ஷன் காட்சிகளில் தேர்ந்த நடிப்பை வெளிப்படுத்துகிறார். காதலுக்காக வாணி போஜன் (நட்புக்காக என சிறப்பு தோற்றத்தில் நடிக்கும் நடிகர்களைபோல) திடீர் திடீரென தோன்றி மறைகிறார். வேல ராமமூர்த்தி இளமைத் தோற்றத்தில் கத்தியுடன் எதிரிகளை துவம்சம் செய்யும் காட்சிகளில் 'எளந்தாரி பிள்ளை'யாக ஈர்க்கிறார். வில்லனாக தனஞ்சயா நடிப்பில் ஸ்கோர் செய்கிறார். விவேக் பிரசன்னா கதாபாத்திரத்தின் எல்லைக்குள் நடித்திருக்கிறார்.

இசையமைப்பாளர் மணிசர்மாவின் மகன் மஹதி ஸ்வர சாகரின் பின்னணி இசை காட்சிகளில் கூட்டாத விறுவிறுப்பை இசையில் கூட்ட உதவியிருக்கிறது. ஸ்ரீதர் ஒளிப்பதிவு இருளையும் ஒளியையும் பிரித்து காட்டும் இடங்களில் கவனம் பெறுகிறது.

மொத்தமாக, சுவாரஸ்யமான ஒன்லைனை



எடுத்துக்கொண்ட இயக்குநர் அதனை கதையின் போக்கில் கொண்டு செல்லாமல் ஒவ்வொரு காட்சிக்கு சாதகமாக வளைத்து நெளித்து எழுதியிருப்பது சுவாரஸ்யத்தை மட்டுபடுத்துவ துடன் செயற்கைத் தன்மையை கூட்டியிருக்கிறது.



# தலைநகரம் 2





இயக்குநர் சுந்தர்.சியின் அறிமுகப் படம் 'தலைநகரம்'. அந்தப் படத்தின் 'ரைட்' கதாபாத்திரத்தை முன்னிலைப்படுத்தி வெளியாகியிருக்கும் இரண்டாம் பாகம்தான் இந்தத் 'தலைநகரம் 2'. 2006ஆம் ஆண்டு சுராஜ் இயக்கத்தில் வெளியான 'தலைநகரம்' படம் நல்ல வரவேற்பைப் பெற்றது. அதுவரை இயக்குநராக வலம்வந்து கொண்டிருந்த சுந்தர். சி இந்தப் படத்தின் மூலமாக நாயகனாக அறிமுகமானார். அந்தப் படத்தில் அவர் ஏற்று நடித்திருந்த ரைட் என்ற ரவுடி கதாபாத்திரத்தை வைத்தே இந்தப் படம் உருவாக்கப்பட்டிருக்கிறது. 'முகவரி', 'தொட்டி ஜெயா' உள்ளிட்ட படங்களை இயக்கிய ஏணு துரை இதை இயக்கியிருக்கிறார்.

**கதை**

மூன்றாகப் பிரிக்கப்பட்ட இந்தியாவின் சென்னை நகரில் மாறன், நஞ்சுண்டா, வம்சி என்ற மூன்று ரவுடிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். மூவருக்கும் இடையே முதலிடத்தைப் பிடிப்பது என்ற போட்டி நிலவுகிறது. ஓய்வுபெற்ற ரவுடியாக அமைதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் ரைட் (சுந்தர்.சி') அப்துல் மாலிக் (தம்பி ராமையா) உடன் இணைந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். ரவுடிகள் மூவருக்கும் ரைட்டுடன் தனித்தனியாகப் பிரச்சினை வருகிறது. மூவருமே அவரைக் தீர்த்துக் கட்டத் திட்டமிட்டு வருகின்றனர். அவர்களிடடமிருந்து ரைட் தப்பித்தாரா? இல்லையா? என்பதே படத்தின் மீதிக்கதை.

படம் தொடங்கியதுமே வட சென்னை, மத்திய சென்னை, தென் சென்னை என மூன்று பகுதிகளை ஆட்டுவிக்கும் மூன்று ரவுடிகளை அறிமுகம் செய்கிறார்கள். இந்த அறிமுகமே சுமார் அரை மணி நேரம் ஓடுகிறது. ஒவ்வொரு ரவுடிக்கும் ஒரு முற்காலக் காட்சி, முற்காலத்தில் முற்காலம் எனக் காட்சிகள் செல்கின்றன. அதன் பிறகு ரவுடியின் வயதான ஆள் ஒருவர் 'அவன் குறுக்க போய்டாதீங்க

சார்' என்கிற பாணியில் சுந்தர்.சி-க்கு மிகப்பெரிய பில்டப் கொடுக்கிறார். 'முடிந்தால் அவனுடைய நாய் குட்டியை தூக்குங்கள்' என்று அந்த பெரியவர் சவால் விடவும், அதனைக் கேட்டு சுந்தர்.சியின் நாய்க்குட்டியை ரவுடியின் ஆட்கள் தூக்கிவந்து விடுகின்றனர். நாய்க் குட்டி தேடி வரும் 'ரைட்' சுந்தர்.சி வெறும் 17 நொடி களில் அனைவரையும் அடித்துப் போட்டுவிட்டு நாயை மீட்டுச் செல்கிறார்.

**பலம் - பலவீனம்**

ஆக்ஷன் படத்தின் திரைக்கதையின் பலமே வலு வான வில்லன்தான். ஆனால், இங்கே ஒன்றுக்கு மூன்று வில்லன்கள் இருந்தும் திரைக்கதை திக்குத் தெரியாமல் திண்டாடுகிறது. வில்லன்களுக்கும் நாயகனுக்கும் இடையே உருவாகும் பிரச்சினைகளை எளிமையாக சொல்லாமல் வளவள என்ற குழப்பியடித்திருக்கிறார் இயக்குநர். நாயகனுக்கு சுற்றி இருப்பவர்கள் கொடுக்கும் பில்டப்புக்கு ஏற்ப அவரது பராக்கிரமத்தை பறைசாற்றும் காட்சிகள் ஒன்று கூடப் படத்தில் இல்லை. அவர் நினைத்ததெல்லாம் சுலபமாக நடக்கின்றன. படத்தில் காவல்துறையினரே இல்லாத சென்னை நகரத்தை வேறு காட்டுகிறார்கள்.

தம்பி ராமையாவை ஒரு விடுதி அறையில் வைத்து புலனாய்வுத்துறையினர் விசாரித்துக் கொண்டிருக்கும் போது, அந்த இடத்தைக் காவல்துறையின் உதவியுடன் கண்டுபிடித்து, நேரில் சென்று அதிகாரிகளிடம் அடுக்கு வசனம் பேசி சவால் எல்லாம் விடுகிறார். பிரபல நடிகையான நாயகிக்கு (பாலக் லால்வானி) நாயகன் மீது காதல் வரும் காட்சியெல்லாம் படு அபத்தம். அதி லும் இறுதிக்காட்சியில் மூன்றாம் பாகத்துக்கான குறிப்போடு படத்தை முடித்திருப்பதெல்லாம் பெரும் துணிச்சல்.

**பாத்திரங்கள்**

சுந்தர்.சி வழக்கம்போல தனக்கு எதுவருமோ அதைக் குறையின்றி செய்திருக்கிறார். தம்பி ராமை யாவும், அவரது மகளாக வரும் ஆயிராவும் சிறப்பான நடிப்பை வழங்கியுள்ளனர். பாலக் லால்வானி, 'பாகுபலி' பிரபாகர், ஜெய்ஸ் ஜோஸ், விஷால் ராஜன், சேரன் ராஜ் ஆகியோரின் நடிப்பை பற்றி குறிப்பிட்டுச் சொல்ல ஏது மில்லை. ஜிப்ரானின் பின்னணி இசை படத்துக்கு எந்த வகையிலும் உதவவில்லை.



# காதிலை பூ வைக்கிற வேலைதானோ?



**கதிரேசன் காத்தவராயன்**

அதிலை சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டடிக்குப் போன கிழமையும் போகவேண்டியிருந்துது. போனன். அங்கை சுதனும் சினேகிதங்களுமாய் கதை வலு சூடானமாதிரி போய்க்கொண்டிருந்துது. என்னைக் கண்டு 'வாங்கோ... வாங்கோ' எண்டு உற்சாகமானான் சுதன்.'இருங்கோ ஐயா' எண்டு கதிரையுந்தந்தான் ஒருத்தன்.
இருந்துகொண்டு எல்லாரையும் பாத்தன். வழக்கமான ஆக்கள்தான். எண்டாலும் ஒராள் புதிசு. 'என்னப்பா கதையளைக் குழப்பிப்போட்டன் போலை...?' எண்டு இழுத்தன். 'சீச்சீ...அப்பிடியென்ன வழக்கத்துக்கு மாறாய்...வழமையானதுதான்..' எண்டான் ஒராள். 'அது இப்பஉந்த ரியூட்டறிச் சட்டமொண்டு வந்திருக்கல்லே? அதைப்பற்றித்தான் கதைபோய்க்கொண்டிருந்தது..' எண்டு சுதன் சொல்லிக்கொண்டிருக்க முருகேசரும் சம்பரும் வந்தினம். அவையை இருத்த 'என்ன தம்பி யவை உங்கடை பக்கக் கதையள் எப்பவும்இருக்குது.. என்ன?' எண்டுகொண்டு முருகேசர் இருந்தார்.
' ஓஓஓ...கதைக்கென்னப்பா பஞ்சம்?' எண்டு சிரிச்சபடி மாஸ்ரரும் வந்திருந்துகொண்டார். 'இல்லை மாஸ்ரர் பெரிய இடம் விளங்கியோ விளங்காமலுக்கோ நல்லது செய்யிறம் எண்டு நினைச்சுக்கொண்டு வில்லண்டமான இடத்திலையல்லே நிக்குது?' எண்டு எல்லாரையும் பாத்தார் முருகேசர். 'முருகேசண்ணை இடையிலை நிப்பாட்டாமை ஒருகதையை முடிக்க மாட்டியோ?' எண்டு சங்கரியர் சினந்தார்.
'தம்பியாக்கள் சொல்லுங்கோ பாப்பம் அந்தச் சட்டம் பிள்ளையளுக்கேதும் விமோசனத்தைக் குடுக்குமெண்டு நம்புகிறியளோ?'எண்டு கேட்டார் முருகேசர். 'அதோ? பிள்ளையளுக்கு எப்படியோ? வாத்திமாருக்கு எப்பிடியும் லாந்தான்...' எண்டான் அந்தப் புதுப்பெடியன். 'சரியாச் சொன்னாய்..' எண்டு உற்சாகமானார் முருகேசர்.
'சட்டம்போடுகிறது சுவமானவேலை...நடைமுறைப் படுத்துகிறதுதான் பிரச்சனை...' எண்டு ஒரு சிரிப்போடை சொன்னார் மாஸ்ரர். 'உண்மைதான் சேர்...அதுக்கையும் ஒரு பெரிய ஓட்டை கிடக் குது..பத்துக்கு மேலை சட்டம் இல்லை... கீழை யுள்ளவைக்குத்தான் சட்டம்' எண்டு ஒருதன் முடிக்கயில்லை இன்னொருத்தன் 'பேசனல் கிளாஸ்..குறூப் கிளாஸ் அதுகளைப்பற்றி ஒரு கதையும்இல்லைக் கவனிச்சனீங்களோ?' எண்டான்.
' ம்..ம்..ம் கவனிக்காமலே? ரியூட்டறி பிள்ளைய ளுக்கு நெருக்கடி எண்டிறது உவைக்குக் கவலை யெண்டால் உதுகளையுமல்லே தடை செய்திருப்பி னம்?' எண்டார் சம்பர்.
'ஐயா...தடையெண்டு ஒண்டுமில்லை ... வெள்ளி பின்னேரமும் ஞாயிறும் ஒன்பதாந்தரத்துக்குள்ள வகுப்புகளை நடத்தத்தான் கட்டப்பாடு.. பெரிசாய் ஒண்டும் இல்லை...' எண்டு சுதன் தெளிவாக்கினான்.
'அப்ப வழமைமாதிரித்தான் எல்லாம்நடக்கப் போகுதோ?' எண்டார் சம்பர். 'கிட்டத்தட்ட அப்பிடித் தான் ஆனால் ரியூட்டறியளுக்கு முன்னாலை சன நெரிசல் அந்தரண்ட நாளானையும்சேத்து மற்றநாளுகளிலை கூடும் எண்டிறியள்? அப்பிடித்தானே?' எண்டு கேட்டன்.
'கதிரேசர் நீர் பிடிச்சிட்டீர்காணும்...உததான்..மற்றும்படி பிள்ளை ஓய்வாயிருக்குமோ எண்டது கேள்விக் குறிதான்' எண்டு மாஸ்ரர் நிப்பாட்டினார். 'பிள்ளை நாலு பேரோடை சேருகிற சந்தற்பம் இல்லாமல் ஆகப் போகுது... பேசனல் கிளாசெண்டு இருந்தானிரைதான் பிள்ளையின்ரை நிலை..என்ன?' எண்டார் மாஸ்ரர்.
'ஓம் சேர்..பிள்ளைக்கு விளையாட்டு கோயில்குளமெண்டு தெரியாமல் போகுது எண்டவை இனியும் அப்பிடித் தானே இருக்கப் போகுதெண்டு விளங்கேல்லையோ?' எண்டு கேட்டுச் சிரிச்சார் முருகேசர். 'தீர்மானமெடுக் கிறவைக்கும் சமூகத்துக்கும் ஏதாலும் தொடர்பிருக் குதோ?' எண்டு கேட்டான் அந்தப் புதுப்பெடியன். 'பெற் றாருக்கு பிள்ளை எல்லாரையும்விடக் கூடின றிசல்ற் எடுத்தால்ச் சரியெண்டதுதான் நிலைப்பாடு...' எண்டார் சம்பர். 'உண்மைதான்...பெடி பெட்டையளுக்கு தங் கடை வாழ்க்கைக்குத் தேவையானதுகளை நடைமுறை ரீதியா சொல்லிப் பழக்கிறதைப் பற்றி ஒண்டும் ஒரு தரும் யோசிக்கயில்லை...ஒரு பக்கத்திச் சிந்தனையாய் போகுது...' எண்டார் பெருமூச்சோடை
மாஸ்ரர். 'அப்பதம்பியவை உந்தச் சட்டம் காதிலை பூ வைக்கிற வேலைதானோ?' எண்டுகொண்டு எழும்ப 'அவை எங்களுக்கு பொழுதுபோகப் பண்ணீனமில்லோ?' எண்டு முருகேசர் சொல்ல எல்லாரும் சிரிச்சினம். நான் வந்திட்டன்.

# ஏன்...?

நட்சத்திரா

# அப்படி...?

## சிறிய காற்றாடியைக் குறி வைப்பதேன்...?

54




உலங்கு வானூர்தியின் அமைப்புப் பற்றிப் பலரும் அறிந்திருப்பீர்கள். உலங்கு வானூர்தியின் மேற்புறமாக விசிறியைப்போல சுற்றக்கூடிய வகையில் பெரிய இறக்கைகள் பொருத்தப்பட்டிருப்பதைக் காணலாம். அதேபோல அதன் பின்பகுதியிலும் சிறிய விசிறிபோன்ற இறக்கைகள் பொருத்தப்பட்டிருக்கும். பெரிய இறக்கையானது உலங்கு வானூர்தியை நிலத்திலிருந்து கிளப்பவும் (மேல்நோக்கி உந்தித் தள்ளவும்) பறப்பை மேற்கொள்ளவும் (தொடர்ந்து வானில் மிதப்பதைத் தக்க வைக்கவும்) இருக்கத்தக் விதத்தில் தொழிற்படுகிறது.

பின்புறமாகப் பொருத்தப்பட்டிருக்கும் சிறிய காற்றாடியானது உலங்குவானூர்தியை நாலாபுறமும் திரும்பச் செய்யும் விதத்தில் தொழிற்படுகிறது. உலங்குவானூர்தி செல்லவேண்டிய திசையைத் தீர்மானிப்பதும் இதன் தொழிற்பாட்டாலேயே ஆகும். சுருங்கச் சொன்னால், கப்பலுக்குச் சுக்கான் எவ்வாறு தொழிற்படுகிறதோ அதே போலத்தான் உலங்குவானூர்தியில் இது செயற்படுகிறது.

பெரிய இறக்கைகளில் ஒன்று செயலிழந்தால்கூட உலங்குவானூர்தியை மெதுவாகப் பறக்க வைத்துப் பாதுகாப்பாகத் தரையிறக்க முடியும். ஆனால் ஙஇந்தச் சிறிய காற்றாடிக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் உலங்கு வானூர்தியால் முன்னோக்கிப் பறக்க முடியாது. மேலுள்ள பெரிய இறக்கைகளின் சுழற்சிக்கு ஏற்ப வானூர்தியும் சேர்ந்து சுழரும். அதன் பின்னர் உலங்கு வானூர்தி விழுந்து விபத்துக்குள்ளாகும்.

உலங்கு வானூர்தியை உந்தித் தள்ளவும் நிலையாக நிறுத்தி வைப்பதற்கும் திசை திருப்பிச் செல்வதற்கும் இந்தச் சிறிய காற்றாடியே பயனாற்றுகிறது. இதனால்தான் உலங்கு வானூர்தி மீது தாக்குதல் தொடுப்பவர்கள் இந்தச் சிறிய காற்றாடியை இலக்கு வைத்துத் தாக்குவது அதிகம்....!

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.06.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781